Registered as a Newspaper

9ஆவது வருட சேவை!
O/L Evening Class
2.30 p.m.
(மூன்றாவது பிரிவு)
ஆரம்பம்: 1.4.86
5,6,7,8,9, ம் வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.
விக்ரு டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ-1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

9வது வருட சேவை!
O/L Day Class
8.30 - 1.30
(இரண்டாவது பிரிவு)
ஆரம்பமாகவுள்ளது
விக்ரு டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு பங்குனி மீ 15 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப் பிறை 16 (28 03 1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:112

இலங்கை இனப் பிரச்சினை:

# இந்திய அரசு முன் இரண்டு யோசனைகள்

## ஆராய்ந்து முடிவுக்கு வந்த பின்னரே அடுத்த நடவடிக்கை

புதுடில்லி, மார்ச். 27

இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக இந்தியா இனி என்ன செய்யவேண்டும்? எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?

இவை குறித்து இந்திய மத்திய அரசின் உயர் வட்டாரங்களின் முன் இரண்டு யோசனைகள் வைக்கப்பட்டுள்ளன என்று அறியவருகிறது.

அந்த இரண்டு யோசனைகளையும் தீர்க்கமாக ஆராய்ந்த பின்னரே அடுத்த நடவடிக்கைபற்றி முடிவு செய்யப்படும் என அறியப்படுகிறது.

இலங்கை இனப்பிரச்சினை குறித்து இந்தியாவின் அடுத்த நடவடிக்கை என்ன? என்பது பற்றி இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் இன்னமும் பரிசீலனை செய்துகொண்டிருப்பதாக புதுடில்லி அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

இரு கோணங்களில் இனப்பிரச்சினை குறித்து ஆலோசிக்கப்படுகின்றதாம்.

● இந்தியாவின் நல்லெண்ணத்தைப் பயன்படுத்த இலங்கை அரசு தவறிவிட்டது. அது எப்படியாவது பிரச்சினையைத் தீர்க்கட்டும் என்று இலங்கையைக் கைவிட வேண்டியதுதான். —இப்படி ஒருசாரார் ஆலோசனை கூறியுள்ளனராம்.

● தமிழர்பிரச்சினைக்கு எப்படியும் அரசியல் தீர்வு கண்டாகவேண்டும். தமிழர் தாக்கப்படுவதை அனுமதிக்க முடியாது —

இப்படி இன்னொரு சாரார் கூறுகின்றனராம்.

இந்த இரண்டு யோசனைகளையும் வைத்துக் கொண்டு இந்திய அரசு அதிகாரிகள் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வண்ணம் இருக்கின்றனர் என்று புதுடில்லி அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

இதனிடையில் இலங்கைப் பிரச்சினையைக் கையாளுவதற்கு திரு ரொமேஷ் பண்டாரியை விசேட தூதராக நியமிப்பது பற்றிய விஷயம், இலங்கையிடமிருந்து கிடைக்கும் பதிலின் தன்மையைப் பொறுத்தே இருக்கும் என்றும் இந்திய அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

### தொலைபேசி தொடர்பு தடைப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 28

நேற்று இரவு சுமார் பத்து மணிக்குப் பிறகு யாழ்-கொழும்பு தொலைபேசித் தொடர்பு தடைப்பட்டது.

மடுக்கந்தையில் உள்ள மைக்ரோ அலைச் சமிக்ஞை நிலையத்தில் ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறே இத்தடைக்குக் காரணம் எனச் சொல்லப்பட்டது.

## கிளிநொச்சி

### இராணுவ முகாமிலிருந்து இளைஞர் தப்பினரா?

கிளிநொச்சி, மார்ச் 28

கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து இளைஞர் ஒருவர் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் தப்பிச் சென்றாரா?

அந்த இளைஞர் இராணுவப் பிடியிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாகக் கூறப்படுவதைத் தொடர்ந்து கிளிநொச்சி, பரவிப்பாஞ்சான், இரத்தினபுரம், திருநகர், கனகபுரம் போன்ற இடங்கள் தினமும் சல்லடை போட்டுத் தேடுதல் நடக்கிறது.

சிவில் உடையிலும், சீருடையிலும் திடீர் திடீர் என வருவோர் நேரகாலமின்றி பல இடங்களிலும் வீடுகளிலும் புகுந்து தேடுதல் நடத்துவதால் மாலையானதும் ஊர் உறங்கிவிடுகிறது ஊரடங்கு நேரம் பிறப்பிக்கப்படாமலே ஊரடங்கும் நிலை ஏற்பட்டுவிட்டது.

இதேவேளை இரவோடிரவாக வட்டக்கச்சி, உருத்திரபுரம் பகுதிகளுக்கும் - இராணுவம் கைது செய்யப்பட்டவர்கள் சகிதம் சென்று தேடுதல் நடத்தி வருவதாகவும் தெரியவந்துள்ளது.

### பதவியாவில் பஸ் மீது துப்பாக்கிச் சூடு

கொழும்பு, மார்ச் 28

பதவியாப் பகுதியில் கடந்த புதன்கிழமை பகல் பிரயாணிகளுடன் சென்று கொண்டிருந்த இ.போ.ச. பஸ் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இச்சம்பவத்தில் இரண்டு சிங்களப் பயணிகள் காயமடைந்தனர்.

★ 10 மணி நேரம் விட்டு விட்டு . . .

# வலி வடக்கில் இரண்டாவது நாளாக வானத் தாக்குதல்

## போராளிகள் பல இடங்களில் மோதல்

பலாலி, மார்ச் 28

வலிகாமம் வடக்கில் உள்ள பல கிராமங்களில் தொடர்ந்து இரண்டாவது நாளாக நேற்றும் வானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

காலை எட்டு மணிக்குத் தொடங்கிய தாக்குதல் விட்டு விட்டு மாலை ஆறு மணி வரை நடைபெற்றது.

அதனால் பலர் காயம் அடைந்தனர், வீடுகள் பல சேதமடைந்தன பயிர்கள் நாசமடைந்தன.

பல இடங்களில் போராளிகள் ஆயுதப் படையினரை எதிர்த்து மோதினர்.

நேற்றைய தாக்குதல் கட்டுவன், குரும்பசிட்டி, வயாவிளான், ஏழாலை, வறுத்தலைவிளான், மயிலிட்டி, குட்டிபுலம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றுக்காலை 6 மணி அளவில் விமான நிலையம் ஊடாகவும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஊடாகவும் சிப்பாய்கள் வந்தனர்.

அவர்கள் விமான நிலையத்தின் தென்பகுதியில் மறைந்து படுத்திருந்தனர் பன்பு விமான நிலையம் ஊடாக கவச வாகனங்களில் மேலும் சிப்பாய்கள் வந்தனர்.

சுமார் 200 க்கும் மேற்பட்ட சிப்பாய்கள் கவச வாகனக் காவலுடன் நடைபவனியாக கட்டுவன் நோக்கிப் புறப்பட்டனர்.

கட்டுவனிலுள்ளமாவடி வைரவர் கோயிலடியை தாண்டியதும் அவ்விடங்களில் மறைந்திருந்த போராளிகள் சிப்பாய்களை நோக்கி சுடத் தொடங்கினர். கிரனேட்டும் வீசப்பட்டது.

இத்தாக்குதலால் சில

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இங்கெல்லாம் பறந்தன விமானங்கள்

வல்வெட்டித்துறை மார்ச்,28

நேற்றுக்காலை சுமார் 5 30 மணி தொடக்கம் விமானங்களும், ஹெலிகொப்டர்களும் தொண்டமானாறு தொடக்கம் பருத்தித்துறை, கரவெட்டி ஈறாக வானத்தில் வட்டமிட்டுப் பறந்து கொண்டிருந்தன.

அதனால் பதற்றமடைந்த மக்கள் தமது அன்றாட அலுவல்களை வெகுவேகமாகச் செய்து முடித்துக் கொண்டு வீடுகளுக்கு விரைந்தனர்.

பாடசாலை மாணவரும்

(4ஆம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறையில் 'ஷெல்' தாக்குதல்

## திருப்பலிப் பூசைக்கு வந்த மதகுரு ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பினர்

பருத்தித்துறை, மார்ச் 28

பருத்தித்துறையில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் சுமார் 1 20 மணியளவில் இராணுவ பொலீஸ் கூட்டு முகாமிலிருந்து "ஷெல்" தாக்குதல் இடம்பெற்றது. அச்சமயம் தரையிறங்கிக் கொண்டிருந்த ஹெலிக்கொப்டர் ஒன்றும் வானத்தில் இருந்து சுட்டது.

இராணுவ முகாமிற்கு அருகிலேயே இச்சம்பவங்கள் நடைபெற்றன.

பெரிய வெள்ளியை முன்னிட்டு பருத்தித்துறை சென்தோமஸ் தேவாலயத்தின் விசேட திருப்பலி பூசை ஆராதனைக்கென யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்திலிருந்து வந்த கிறிஸ்தவ மதகுரு ஒருவர், இச் சம்பவங்களின்போது மயிரிழையில் தெய்வாதீனமாக உயிர் தப்பினர் என அறியப்படுகிறது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

வண. பிதா அவர்கள் நெல்லியடியிலிருந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

அரசுக்கு எதிராக

# தீப்பந்தம் ஏந்தி மக்கள் கோஷம்

## யாழ்நகரில் நடந்த பேரணி

— உதயன் செய்தியாளர்கள்:- க. இரத்தினராஜசிங்கம், பி. வனிதராஜன் —

நல்லூர், மார்ச் 28

நேற்று முதல் தடவையாக யாழ்நகரில் நடைபெற்ற தீவட்டிப் பேரணியில் சுமார் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

கைகளில் தீவட்டி ஏந்தியவாறும் ஸ்ரீ லங்கா அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக சுலோகங்களைக் கோஷித்தவாறும் பெருந் திரளான மக்கள் பேரணியில் பங்கு பற்றினர்கள்.

யாழ்நகரின் சுற்றுப் பகுதியில் சுமார் ஐந்து மைலுக்கும் அதிகமான தூரத்திற்குப் பேரணி சென்றது.

நேற்று மாலை 6 00 மணிக்கு யாழ்ப்பாணம் சிவன் கோயிலடியில் பேரணி ஆரம்பிக்கப்பட்டது.

வைத்தீஸ்வரா வீதி, மானிப்பாய் வீதி, காங்கேசன் வீதி ஆகியவற்றின் வழியாக கொக்குவில் சந்திக்கு சென்ற பேரணி அங்கிருந்து கல்வியங்காட்டிற்கும்,

பின்னர் அங்கிருந்து பருத்தித்துறை வீதி வழியாக நல்லூரையும் சென்

(4ஆம் பக்கம் பார்க்க)

### இன்று பெரிய வெள்ளிக்கிழமை

யாழ்ப்பாணம், மார்ச் 28

கிறிஸ்து சிலுவையில் அறையுண்டு மரித்த தினமான பெரிய வெள்ளிக்கிழமை இன்று ஆகும்.

நாடெங்கும் உள்ள ஆலயங்களில் இன்று காலை விசேஷ ஆராதனைகள் நடைபெறுகின்றன.

### தந்தை செல்வா நினைவு விழா

யாழ்ப்பாணம்,மார்ச் 28

தந்தை செல்வாவின் 88 ஆவது பிறந்த தினத்தை நினைவு கூரும் வகையில் நல்லூர் இந்து விடுதியில் விசேட பொதுக் கூட்டம் ஒன்று நடத்தப்படும்

மார்ச் 31 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் இக்கூட்டத்தை தந்தை செல்வா அறங்காவல்குழு ஒழுங்கு செய்துள்ளது.

பல்கலைக்கழக விசேட விரிவுரையாளர் திருமதி கு.பரராஜசிங்கம், முன்னாள் செனட்டரும் செல்வா அறங்காவல் குழுச் செயலாளருமான திரு.சு. நடராசா, யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம், அறவழிக்குழுச் செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

## போராளிகள் குறித்து புதுக்கதை சொல்கிறார் பௌத்த சங்கத் தலைவர்

கொழும்பு, மார்ச் 28

போராளிகள் பற்றி புதுகதை ஒன்றை அகில இலங்கை பௌத்த சங்கத் தலைவர் எட்மண்ட் பஞெகொட வெளியிட்டிருக்கிறார்.

ஹோமகம என்னும் இடத்தில் நடைபெற்ற சமயக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் திரு எட்மண்ட் பஞெகொட சொன்னதாவது;

போதைப் பொருள்களை நாட்டுக்குள் கொண்டுவந்து சிங்கள மக்கள் மத்தியில் விநியோகிப்பது போராளிகளின் திட்டங்களில் ஒன்றாகும்.

அதன் மூலம் சிங்கள இனத்தை நாசப்படுத்தி அழித்துவிடலாம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். இப்படிச் செய்வதன் மூலம் தங்கள் இலட்சியத்தை அடையலாம் என்று போராளிகள் எண்ணுகிறார்கள்.

இப்படி திரு. எட்மண்ட் பஞெகொட சொன்னார்.

## மற்றொரு இந்திய விமானத்தைக் காணவில்லை

புதுடில்லி, மார்ச் 27

இந்திய விமானப்படைக்குச் சொந்தமான மற்றொரு விமானம் 7 விமானிகளுடன் காணாமல் போனது.

ஓமான் மண்டாட் விமான நிலையத்திலிருந்து ஜமுனாநகருக்கு பறந்து கொண்டிருக்கையில் கடந்த செவ்வாய்க்கிழமையன்று இந்த விமானம் காணாமல் போனது.

ஏ. என் 32 ரகத்தைச் சேர்ந்த இந்த விமானத்தை இந்தியக் கடற்படையும், விமானப்படையும் கூட்டுச் சேர்ந்து தேடி வருகின்றன.

இந்திய விமானப்படைக்குச் சொந்தமான மற்றொரு விமானம் ஒன்று ஜம்மு காஷ்மீர் பகுதியில் 15 இராணுவ வீரர்களுடனும், 4 விமானிகளுடனும் பறந்து கொண்டிருக்கையில் கடந்த சனியன்று காணாமல்போனது குறிப்பிடத்தக்கது

சுபநேரம்
28- 3- 1986
வெள்ளிக்கிழமை
● நேரம்:
6.14 முதல் 7.44 வரை
ராகுகாலம்:
10.44 முதல் 12 14வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
பெரிய வெள்ளி
காரைக்காலம்மையார் குருபூஜை

## காரைநகரில் மூன்று முதலாளிகள் வீட்டில் கொள்ளை

ஊர்காவற்றுறை, மார்ச் 28

கடந்த புதன் இரவு காரைநகரில் மூன்று வீடுகளில் புகுந்த ஆயுதம் தாங்கிய கோஷ்டியொன்று பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், வீட்டுப் பாவனைப் பொருள்கள், மற்றும் பெருந்தொகையான பணம் ஆகியவற்றை கொள்ளையிட்டுச் சென்றிருப்பதாக அறிய வருகிறது.

யாழ்ப்பாண நகரிலுள்ள கடை உரிமையாளர் ஒருவரின் வீடு, ஊர்காவற்றுறையில் உள்ள கடை உரிமையாளர் ஒருவரின் வீடு, அடைவு பிடிக்கும் கடை உரிமையாளர் ஒருவரின் வீடு ஆகியனவே கொள்ளையிடப்பட்ட வீடுகளாகும்.

இரண்டு வான்களில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு அவசரத் தீர்வு வேண்டும்

### என ரொனி மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 28

இனப்பிரச்சினைக்கு மிக அவசரமாகத் தீர்வு காணப்பட வேண்டும்.

இல்லாவிடில் இலங்கை பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்க நேரிடும்.

இப்படி நிதி அமைச்சர் ரொனி டி மெல் தனது சக அமைச்சர்கள் மத்தியில் தெரிவித்தார்.

நிதி அமைச்சரின் நிலையை சக அமைச்சர்களும் ஆதரித்தனர் என்று கூறப்படுகிறது.

இலங்கைக்கு நிதி உதவி செய்யும் நாடுகளின் கூட்டம் எதிர்வரும் ஜூன் மாதத்தில் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

மிச்சதி ஒளி



காசைக் கையாளுறவர் எல்லே. அவருக்குத்தான் கையிலை கடிக்கிறதின்ரை அனுபவம் கூட. அருமையும் தெரியும் அவராவது அரசாங்கத் தலைவருக்குள்ளை விஷயத்தைப் புகுத்துறரோ பாப்போமே . . !

இனப்பிரச்சினைக்குத் தீர்வு

# முறையாக அழைத்தால் சுதந்திரக் கட்சி சிந்திக்கும்

## அமைச்சர் பங்குபற்றிய கூட்டத்தில் அனுரா

கொழும்பு, மார்ச் 28

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சுதந்திரக்கட்சி ஆக்கபூர்வமான ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று இங்கு கோரப்பட்டது

முறையாக அழைத்தால் சுதந்திரக் கட்சி அது பற்றிச் சிந்திக்கும்.

அங்கன்ஹல விகாரையில் கடந்த புதன்கிழமை நடந்த கூட்டம் ஒன்றில் பேசிய திரு. அனுரா பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கூறினர்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் திரு.ஈ.எல்.பி. ஹுருளேயின் பேச்சுக்குப் பதிலளிக்கும் விதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் ஹுருளே பேசுகையில் சொன்னதா

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## "பேனாவை நம்பி நானும் என்னை நம்பிப் பேனாவும்"

'தர்மயுத்தம்' என்ற படத்தைக் கொடுத்து திரைஉலகை ஒரு கலக்குக் கலக்கினாரே அந்தப் படத்தின் கதாசிரியர் தான் பீட்டர் செல்வகுமார்!

கடைசியாக சுந்தர்ராஜன் டைரக்ஷனில் 'அம்மன் கோயில் கிழக்காலே' என்ற படத்தைத் தயாரித்து வெளியிட்டார்.

இதோ அவர் கூறும் சுவையான தகவல்கள்.

நான் பேனாவை மட்டுமே நம்பிவாழ்பவன். இப்போதும் எழுதிக் கொண்டுதான் இருக்கின்றேன்.

நான் எப்போதும் திரை உலகில் கதாசிரியனாகவே புதிய படைப்புக்களைப் படைக்க விரும்புகின்றேன்.

கதாசிரியன் என்ற முறையில் பேனாவை இரவல் தர விரும்பவில்லை. அதே சமயம் மற்றவர் பேனாவைக் கடன் வாங்கவும் மாட்டேன்.

அப்படியிருக்கும் போது என் படத்துக்கு வேறொருவர் கதை எழுதி டைரக்ட் செய்வது ஏன் என்று நீங்கள் கேட்கலாம்.

படைப்பாளி என்ற முறையில் ஆசாபாசங்கள் உள்ளவன் நான். என் கதை நன்றாகப் படமாக்கப்பட வேண்டும். எனக்குப் பேர் வர வேண்டும் என்ற சுய நலம் எல்லாக் கதாசிரியர்களுக்கும் உண்டு. அவனே தயாரிப்பாளனாக மாறும் போது வியாபாரியாகவும் மாறுகிறான்.

அதே போல் தான் நானும் எனது டைரக்டருடைய எந்த விஷயத்திலும் நான் தலையீடு செய்தது கிடையாது.

அவருக்குப் பரிபூரண ஒத்துழைப்பைத் தந்தால் தான் அவர் மிகுந்த கவனத்துடன் படம் எடுக்க முடியும். தவறு நேர்ந்தால் அதை மாற்றிக் கொள்ளவும் அவரால் முடியும்.

இவ்வாறு தனது பட அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கிறார் கதாசிரியர். ஒரு சினிமா வெற்றி பெற மூலக்கதை தரமானதாக அமைய வேண்டும் என்பதே இவரது கருத்து.

சினிமா வாசகர்களாகிய உங்கள் கருத்து என்னவோ?

தினசரி சினிமா

## தென் கொரியாவில் ஆர்ப்பாட்டங்கள்

சோல், மார்ச்.27

தென்கொரிய ஜனாதிபதியை ராஜினாமாச் செய்யும்படி கோரி நடத்தும் ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்து வருகின்றன.

தென் கொரியாவின் இரண்டாவது பெரிய நகரான புஸானில் 20,000 பேர் வரையில் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினார்கள்.

"இராணுவச் சர்வாதிகாரம் ஒழிக". "அரசமைப்புச் சட்டத்தைத் திருத்து" போன்ற கோஷங்களை எழுப்பிய வண்ணம் ஆர்பாட்டக்காரர்கள் சென்றனர்.

பஞ்சாப் முதல்வர்

# பர்னாலா மயிரிழையில் உயிர் தப்பினார்

## உரையாற்றிய மேடையை நோக்கி தீவிரவாதிகள் குண்டு வீச்சு

சண்டிகார், மார்ச்.27

பஞ்சாப் முதலமைச்சர் பர்னாலாவும் அவரது அமைச்சர்கள் சிலரும் மயிரிழையில் உயிர் தப்பினர்.

சண்டிகாரில் நடந்த கோலிப் பண்டிகைக் கொண்டாட்ட நிகழ்ச்சிக் கூட்டத்தில் நடந்த குண்டு வீச்சிலிருந்து அவர்கள் ஆபத்தெதுவும் இன்றித் தப்பித்துக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பெருந்தொகையான மக்கள் திரண்டிருந்த கோலிப் பண்டிகை அரங்கை நோக்கி தீவிரவாதிகள் தமது தாக்குதலை மேற்கொண்டதாக செய்திகளில் தெரிவிக்கப்பட்டது.

தடிகளுடனும் மற்றும் காயம் ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களுடனும் அவர்கள் அங்கு காணப்பட்டனர்.

கூட்டத்தில் பேசிய பர்னாலாவும் அமைச்சர்களும் மேடையிலிருந்து இறங்கிச் செல்லும் பொழுதே குண்டு வீசப்பட்டது.

தீவிரவாதிகளின் இந்த நடவடிக்கைகளை கட்டுப்படுத்த பொலீஸார் குண்டாந்தடி கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர்.

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியாது போகவே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் 5 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் மேலும் 15 பேர் காயம் அடைந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த வன்முறைச் சம்பவத்தை அடுத்து சண்டிகார் பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சட்டம் ஒழுங்கு பற்றி ஆராய்வதற்கான அவசர கூட்டமொன்றையும் பிரதமர் பர்னாலா கூட்ட ஏற்பாடு செய்துள்ளார்.

வெளிச் சக்திகள் தலையீடுகளையும் சமூக விரோத சக்திகளையும் ஒடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் அவர் அறிவித்துள்ளார்.

## பாக் விமானிகள் இலங்கை விமானங்களில்

### இந்திய நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் உறுப்பினர் தகவல்

இலங்கை விமானங்களை பாகிஸ்தான் விமானிகள் ஓட்டுகின்றனர் என்று தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் இருவர் இந்திய நாடாளுமன்றத்தில் இத்தகவல்களை வெளியிட்டார்.

இஸ்ரவேலை அங்கீகரிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் பலஸ்தீன விடுதலை இயக்கத்தை கேட்டுள்ளது.

அதே நேரத்தில் இஸ்ரவேலின் மொஸாட் படையினர் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்து ஆலோசனைகள் நடத்தியுள்ளனர்.

பாரதம் எதிர்ப்பு நாடுகளால் சுற்றிவளைக்கப் படுகின்றன.

இப்படி உறுப்பினர்கள் கூறினர்.

## ஒத்துழைப்பு

பொன், மார்ச் 27

அமெரிக்காவும் மேற்கு ஜேர்மனியும் ஒத்துழைப்புக்கான உடன்படிக்கை யொன்றில் இன்று அல்லது நாளை கைச்சாத்திடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவின் நட்சத்திரப் போர்த் திட்டத்துக்கான ஒத்துழைப்பு உடன்பாடே இது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## அப்பட்டமான படுகொலை

புதுடில்லி, மார்ச் 27

இலங்கைத் தமிழர் மீதான தாக்குதல் அப்பட்டமான படுகொலையாகும்.

இனப்பிரச்சினை சம்பந்தமாக இந்தியா உறுதியான நிலை எடுக்க வேண்டும்.

இலங்கை அரசின் வெறும் வார்த்தைகளை நம்பி இந்தியா ஏமாறக் கூடாது.

இப்படி இந்திரா காங்கிரஸ் எம் பி திரு. குர்திலால்சிங் சொன்னார்.

இந்திய நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சு நிதி ஒதுக்கீடு விவாதத்தின்போது பல எம்.பிக்கள் காரசாரமாகப் பேசினர்.

# வெளி உலகில்

மத்திய தரைக்கடலில்

## அமெரிக்கப் படைகள் விலகினால் ரஷ்யாவும் விலகும்

### அதிபர் கொர்ப்பச்சேவ் அறிவிப்பு

லண்டன், மார்ச் 27

மத்தியதரைக் கடற்பிராந்தியத்திலிருந்து அமெரிக்கா தனது படைகளை விலக்கிக்கொள்ளுமானால் தானும் தனது படைகளை விலக்கிக் கொள்ளத் தயாராக இருப்பதாக ரஷ்யா வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் இந்தப் பிராந்திய நிலைகளிலுள்ள ஆயுதவைப்பிடங்களையும் அமெரிக்கா வாபஸ் பெற வேண்டுமெனவும் சோவியத் ரஷ்யா மேலும் ஆலோசனை தெரிவித்துள்ளது

மாஸ்கோவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அல்ஜீரியா அதிபருக்கு அளித்த விருந்து நிகழ்ச்சியில் பேசும்போதே சோவியத் அதிபர் கொர்பச்சேவ் இந்த செய்தியை வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஷித்தே வளைகுடாப் பகுதியில் அமெரிக்க நடவடிக்கைகள் எல்லை மீறியுள்ளன.

மத்தியதரைக் கடற்பிராந்தியங்களில் அமெரிக்க கடற்படைக் கப்பல்களின் நடமாட்டம் சோவியத் ரஷ்யாவுக்கு மட்டுமல்ல இந்தப்பிராந்தியத்திலுள்ள நட்பு நாடுகளுக்கும் பெரும் அச்சுறுத்தலாகும்.

இந்த விடயங்கள் தொடர்பாக சோவியத் யூனியன் அமெரிக்காவுடன் பேச ஆயத்தமாக இருக்கிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த ஆலோசனையை அமெரிக்கா தூக்கி எறிந்துவிட்டதாக பிந்தியசெய்திகளில் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்கா இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்;

ரஷ்ய கடற்படைக்கப்பல்கள் இந்தப்பகுதிகளில் தாராளமாக நடமாடுகின்றன.

1979ஆம் ஆண்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட கடல் எல்லைகளை அமெரிக்கா மீறவில்லை.

சோவியத் - யூனியன் உட்பட 35நாடுகள் இந்த எல்லைகளை ஏற்றுக்கொண்டுள்ளன.

அதன்படி அமெரிக்கா சர்வதேச கடற்பிராந்தியங்களில் கட்டுப்பாட்டுடனேயே இயங்கி வருகிறது எனக் கூறியுள்ளது.

## ரஷ்யா கண்டனம்

மாஸ்கோ, மார்ச் 27

நெவேடா பாலைவனத்தில் அமெரிக்க நடத்திய அணு ஆயுதப் பரிசோதனையை சோவியத் ரஷ்ய தினசரி பிரவ்தா வன்மையாகக் கண்டித்துள்ளது.

## வடக்கு, கிழக்கில் அதிக தொழில்வாய்ப்புகள் வேண்டும் என வலியுறுத்து

மானிப்பாய், மார்ச் 28

"வடக்கு கிழக்கு மாகாணங்களை தவிர ஏனைய இடங்களில் தமிழ் மக்கள் சென்று தொழில்செய்ய முடியாத நிலையில் உள்ளனர். எனவே, எமது பிரதேசங்களிலேயே சகலருக்கும் தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும், அதற்கு வசதியாக தொழில் வாய்ப்புக்கள் பற்றி மக்களுக்கு பிரசாரம் செய்யப்படவேண்டும்."

உடுவில் கலைமதி சனசமூக நிலையத்தினரால் நடத்தப்பட்ட சிறப்புக் கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய அகதிகள் புனர் வாழ்வுக்கழக தமிழ் மகளிர் அவைப் பேச்சாளர் திரு இரா முருகையா இவ்வாறு கூறினார்.

இக்கருத்தரங்கிற்குத் திரு. ந. காசிநாதன் தலைமை வகித்தார்.

திரு இரா.முருகையா தமது உரையில் மேலும் கூறியதாவது:-

வடக்கு, கிழக்கு பகுதிகளில் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமானால் அரசாங்கத்திற்கு வருமானத்தைக் தேடித்தரும் பல பாவனைப் பொருள்களைப் பகிஷ்கரிப்புச் செய்யவேண்டும்.

சாராயம், சிகரட் போன்ற பொருள்களைக் கைவிடவேண்டும் சீனிக்குப் பதிலாக பனங்கட்டியை உபயோகிக்க வேண்டும் குரக்கன், உழுந்து, பயறு போன்ற சிறுதானியப் பயிர்களை அதிக அளவில் உற்பத்தி செய்தல் அவசியம்.

இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளை விடுத்து பாற்பண்ணைகளை வீடுகள் தோறும் ஏற்படுத்த வேண்டும்

யாழ் மகளிர் அவை செயலாளர் செல்வி பஞ்சுளாவும் உரையாற்றினார்.

சனசமூக நிலையத் தலைவர் செல்வன் பொ. உதயகுமார் நன்றி கூறினார்.

## பயிற்சி வகுப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

புங்குடுதீவு கல்வி வட்டார ஆசிரியர் சேவைக் காலப் பயிற்சி வகுப்புக்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சி வகுப்புக்கள் இன்று 28 இல் ஆரம்பமாக இருந்தன. தவிர்க்க முடியாத காரணங்களினால் இவ்வகுப்புக்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

ஏப்ரல் 4 ஆம் திகதி இப்பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகும். ஏப்ரல் 9 ஆம் திகதி வரை வகுப்புக்கள் தொடர்ந்து புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறும்.

## தெரிவானோருக்கு கடிதங்கள்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இவ்வாண்டு நடைபெறவிருக்கும் முறைசாராக் கல்வி உடை அமைத்தல் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டோருக்கான கடிதங்கள் அவரவர் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இம்மாதம்29ஆந் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்குத் தவறாது கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு கொத்தணி அதிபர் திரு நா வேலுப்பிள்ளை மேற்படி கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## குத்தகைக்கு

சகல தளபாடங்களுடன் 176 ச.அ. பரப்புள்ள கடையொன்று யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் உடனடியாகக் குத்தகைக்குக் கொடுக்கப்படும். சனி, ஞாயிறு தினங்களில் தொடர்பு கொள்க. பவானி பேணிச்சர் பலஸ் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற ஆசிரியர் நியமனம்:

## தமிழர் -- முஸ்லிம்கள் புறக்கணிப்பு

### கல்வி மந்திரிக்கு மகஜர்

அம்பாறை, மார்ச் 28

"தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஆசிரியர் சேவைத்திட்டத்தின் கீழ் ஆசிரிய நியமனம் கோரி விண்ணப்பித்த தமிழ், முஸ்லிம் இளைஞர் யுவதிகளுக்கு இதுவரை ஆசிரிய நியமனம்வழங்கப்படவில்லை. அவர்கள் புறக்கணிக்கப் பட்டுள்ளனர்"

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் கிழக்குப்பிராந்திய பணிப்பாளர் ஜனாப். எம் ஐ உதுமாலெவ்வை, கல்வி அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்

பணிப்பாளர் ஜனாப். உதுமாலெவ்வை இந்த மகஜரில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

"மேற்படி ஆசிரிய நியமனம் சம்பந்தமாக 21-11-1985ஆம் திகதி தேசியப் பத்திரிகைகளில் விண்ணப்பம் கோரப் பட்டபோது இளைஞர், யுவதிகள் விண்ணப்பித்திருந்தனர்.

இதற்கான நேர்முகப் பரீட்சைகள் 7—12—85 இல் மாவட்டக்காரியாலயங்களிலும், இறுதி நேர்முகப் பரீட்சை 17—12—85 இல்கொழும்பிலும் நடத்தப்பட்டன.

இதன்படி 28—12—85 இல் 400சிங்கள இளைஞர் யுவதிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது. தமிழ், முஸ்லிம்களுக்கு பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது.

சிங்கள இளைஞர், யுவதிகட்கு மட்டும் நேர்முகப் பரீட்சை நடத்திவிட்டு நியமனம் வழங்கியமை இளைஞர் சேவைகள் மன்றத்தின் நல்ல நோக்கங்களை இல்லாமல் செய்து விட்டது.

சிங்கள இளைஞர்களை விடவும், தமிழ், முஸ்லிம் இளைஞர்களிடம் போதிய தகைமைகளிலிருந்தும் இந்தப் புறக்கணிப்புக் காட்டப்பட்டமை அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே மேற்படி நியமனத்திற்கு விண்ணப்பித்த சகலருக்கும் நேர்முகப் பரீட்சை நடத்தித் தகுதியான வர்களுக்கு இனவிகிதாசார முறையின்கீழ் நியமனம் வழங்குமாறு முஸ்லிம்லீக் வாலிப முன்னணிகளின் கிழக்குப் பிராந்திய சம்மேளனம் சார்பாக அதன் தலைவர் என்ற முறையிலும், கிழக்குப் பிராந்திய பணிப்பாளர் என்ற முறையிலும் கோருகின்றேன்"

இவ்வாறு மகஜரில் கோரப்பட்டுள்ளது.

## யாழ் வர்த்தகர்கள் பிரச்சினை குறித்து இன்று ஆராயப்படும்

நல்லூர், மார்ச் 28

யாழ். வர்த்தகர்கள் சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பாரதி பாஷா வித்தியாலயத்தில் நடைபெறுகிறது.

இன்று பிற்பகல் இரண்டு மணியுடன் வர்த்தக நிலையங்களை மூடிவிட்டு பொதுக் கூட்டத்தில் சமுகம் அளிக்குமாறு வர்த்தகர்கள் சங்கச் செயற்குழு வர்த்தகர்களைக் கேட்டுள்ளது.

இது சம்பந்தமாக வர்த்தகர்கள் சங்கம் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

'வர்த்தகர்களாகிய நாம் இன்று பல விதமான நெருக்கடிகளால் பாதிப்படைந்துள்ளோம்.

மேலும் பாதிப்புகள் ஏற்பட இடம் கொடாது நாம் ஒன்றுபட்டு செயலாற்றுவதன் மூலமே நெருக்கடிகளைத் தடுக்க முடியும்.'

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் அமைப்பு கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்நகர் மக்கள் அமைப்புக் கூட்டம் நாளை 29 ஆம் திகதி சனிக்கிழமை மாலை யாழ் புனித மரியாள் வித்தியாலயத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் இனி நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும்.

# மக்கள் முகம்

## நவாலி சனசமூக நிலைய நிர்வாகிகள்

வட்டுக்கோட்டை, மார்ச் 28

நவாலி மேற்குப் பகுதியில் புதிதாக சனசமூக நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் நிர்வாகிகள் தெரிவு நடைபெற்ற போது பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு சி. கணேசன் உபதலைவர்:- திரு. எஸ். எல். சிவம் செயலாளர்:- திரு. பெ ந. தவரத்தினம் உப செயலாளர்:- திரு. இ. வன்னியசேகரம் பொருளாளர்: திரு. நா ரவி

நிர்வாகிகள்; திரு. ஏ. கிறிஸ்தவராஜா திரு. ஜே. ரஞ்சன் திரு. ஏ. சதானந்தன் திரு. க. சந்திரன் திரு நா. விஜயநாதன் திரு க. திருநாவுக்கரசு

## தண்ணீர்ப்பந்தல் உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம், மார்ச் 28

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தண்ணீர்ப் பந்தல் குழுவின் இருபத்திமூன்றும் ஆண்டு நடப்பு வருட உத்தியோகத்தர்கள் வருமாறு:-

தலைவர்; க.தர்மசீலன், உபதலைவர்: க. பெரியபிள்ளை, செயலாளர்: க. ஆனந், உபசெயலாளர்: க ஜெயம், பொருளாளர் இ.சடாட்சரம், உபபொருளாளர்; க தர்மத்துரை

செயலவை;-

எப்.ஜெடி, கே. மகேந்திரன், ஜோ. சுரேஷ், வி. சிவராசா, பி. சரவணபவானந்தன், எஸ். ரங்கநாதன், க. கந்தசாமி, ரி. சிவபாலன், ரி சிவகுமார்,

புனித மரியாள் வித்தியாலயத்தில்

## மாணவர் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் விழா

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணம் புனித மரியாள் வித்தியாலயத்தின் மாணவர் தலைவர்களுக்குச் சின்னம் சூட்டும் விழா அண்மையில் நடைபெற்றது. வித்தியாலய முன்றலில் அதிபர் திரு. வெ. வில்லியம் விழாவுக்கு தலைமை வகித்தார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் மாவட்டக் கல்வி அதிகாரி திரு கு. சோமசுந்தரம் பேசுகையில்;


மாணவ தலைவர்கள் வருங்கால தலைமுறையின் வழிகாட்டியாக விளங்க வேண்டும்— என்று கேட்டுக் கொண்டார்.

பாடசாலை வளர்ச்சிக்கு ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று வித்தியாலய அதிபர் திரு. வெ. வில்லியம் கேட்டுக் கொண்டார்.

மாணவரின் அணிவகுப்பு மரியாதை, பல் இசைக்குழுவின் இசை நிகழ்ச்சி ஆகியனவும் இடம் பெற்றன.

திரு. நா திருச்செல்வம் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார். உப அதிபர் திரு. சி. தார்சியஸ் நன்றி சொன்னார்.

## 63ஆவது நாள் நினைவு அஞ்சலி



செல்வன் சோமசேகரம் ஜெயசிலன் (சங்கர்)

அன்னையின் மடியில்: 04-02-1975

இறைவன் அடியில்: 25-01-1986

குடும்பத்தின் ஒளிவிளக்காய் பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய் எமது குடும்பத்தில் மூன்றாவது புதல்வனாய் வந்துதித்து வளர்ந்து மலருகின்ற வேளையிலே சண்டாளன் பாவி அவன் பட்டப்பகலிலே பார்த்திருக்க துப்பாக்கி கொண்டு பாலகனின் உயிர் பறித்தான். அம்மாவையும் அப்பாவையும் கண் கலங்கவைக்காத நீ இன்று நித்தமும் உன் பிரிவால் கண்ணீரைப் பொழிய வைத்து விட்டாயே மகனே! மகனே சங்கர் உன் பாசத்தால் உள்ளம் தவிக்கிறோம். நாட்கள் மாதங்கள், வருடங்கள் பல சென்றாலும், உன் பிரிவை ஈடுசெய்ய இவ்வுலகில் ஏதும் இல்லை.

உமது பிரிவால் துயருறும்,

ஐயா, அம்மா, அண்ணா, அக்கா, தம்பி, மாமிமார், சித்தப்பாமார், உற்றார், உறவினர், மாமா, மைத்துனர், சிறியதாய்மார், அப்பாச்சி, அம்மம்மா

உமது ஆத்மா சாந்தி அடைவதாக!

கிளிநொச்சி,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

தனக்கெனத் தனியாக உணவு சமைப்பவன் பாவத்தையே சமைத்து உண்கிறான்.

-காந்தி அடிகள்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 24805 22073
28-03-86 உ. பெ. 23

## ஒரு மாத அவகாசம் காற்றேடு போயிற்றே!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, இந்தியா இலங்கைக்கு வழங்கிய ஒருமாத கால அவகாசம் நேற்றேடு முடிந்தது

இந்திய நாடாளுமன்றத்தில் அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் திரு பலிராம் பகத் அறிவித்த அவகாசம், இங்குள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜே என் டிக்ஸிற் மூலம் வாய் மூலமாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அந்த அறிவிப்புக்கு இலங்கை மதிப்புக் கொடுத்ததாக இல்லை அதைப் பெரிதாக எடுக்கவும் இல்லை அரசியல் தீர்வு ஒன்றிலேயே தமக்கு அக்கறை இருப்பதாகக் காட்டிக் கொள்ளும் விதத்தில் இந்தியாவில் உள்ள தனது தூதுவர் மூலமும் இங்குள்ள இந்தியத் தூதுவர் மூலமும் வாரத்துக்கு வாரம் ஒவ்வொன்றைச் சொல்லிக் காலத்தைக் கழித்து விட்டது ஒருமாத கால அவகாசம் காற்றேடு போய்விட்டது.

இடைப்பட்ட காலத்தில் வானத் தாக்குதலை நிறுத்தியதாக அறிவித்து இந்தியாவையும், இலங்கைத் தமிழர் நலனில் அக்கறை காட்டும் ஏனைய நாடுகளையும் 'தாஜா' செய்வதாகக் காட்டிக் கொண்டது இலங்கை.

ஆனுல், இனப் படுகொலையை நிறுத்தி, இராணுவத் தீர்வின் பக்கம் சாராது அரசியல் தீர்வுக்கு சாயும் எண்ணம் இன்னும் இலங்கைக்கு இல்லை என்பதைக் கடந்த ஒரு மாத காலத்தில் நடந்த சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஒரு மாத அவகாசம் முடியும் தறுவாயில் கடந்த இரண்டு தினங்களாகத் தெல்லிப்பழைப் பகுதியில் நடந்த வானத்தாக்குதல் அதற்கு நல்ல உதாரணம்.

இதேவேளை இந்தியாவும் இலங்கையின் போக்கை இப்போது தெளிவாகப் புரிந்து கொள்கிறது என்பதும் புலனுகிறது. மத்திய அரசாங்க அதிகாரிகள் மட்டுமன்றி, அமைச்சர்கள் மட்டுமன்றி, தமிழக எம். பிக்கள் மட்டுமன்றி, வட இந்திய எம் பிக்களே இலங்கையின் வெளிவேஷத்தைப் புரிந்து விட்டார்கள். அதனை இந்தியாவிலிருந்து வரும் செய்திகள் நன்கு புலப்படுத்துகின்றன.

இனிமேல் என்ன நடக்கப்போகிறது? இந்தியாவும் இலங்கையும் இனப்பிரச்சினை விஷயத்தில் இரு துருவங்களாகி நிற்கின்றன. வெளித் தோற்றத்துக்கு பார்ப்பதற்குப் பிரச்சினையைத் தீர்ப்பதில் இரு சாராரும் உறவு நிலையில் இருப்பதாகத் தெரிந்தாலும் உண்மை அதுவல்ல.

இனப் பிரச்சினையை இராணுவ ரீதியாகத் தீர்க்க இலங்கை முற்பட்டால் இந்தியா அதற்கு உடந்தையாக இருக்கப் போவதில்லை. அது மட்டும் உள்ளங்கை நெல்லிக்கனி.

சீனுவும் கூட இராணுவத் தீர்வுக்குத்தான் ஆதரவில்லை என்பதை அறிவித்திருக்கிறது. இலங்கையின் இராணுவப் போக்குக்குத் துணை நின்று இந்தியாவுடன் வளர்ந்து வரும் உறவைக் கெடுக்க அது விரும்பவில்லை.

ஆகையால் அரசியல் தீர்வு என்று கூறிக் கொண்டு இராணுவத் தீர்வைக் காண விரும்பும் இலங்கை அரசு எங்கே போய் தட்டுப் பட்டு விழும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

சர்வதேச அபிப்பிராயத்துக்கு எதிராகச் செயலாற்ற அது முனையுமானுல் அதன் பலாபலன்களை தமிழ் மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் அனுபவித்தே ஆக வேண்டிவரும்.

## ஹெலிக்கொப்டர் சுட்டபோது கம்பி வேலிகளை தாண்டி ஓடினேன்

### காலில் சூடு வாங்கியவர் தகவல்

பலாலி, மார்ச் 28

ஹெலிக் கொப்டர் சுட்ட போது லொறியில் இருந்து இறங்கி கம்பி வேலிகளை தாண்டி ஓடினேன். எனினும் காலில் சூடு விழுந்தது.

புதன்கிழமை நடந்த ஹெலிக்கொப்டர் சூட்டில் காயம் அடைந்த சுப்பையா நாகநாதன் (31 வயது) என்பவர் உதயன் செய்தியாளரிடம் மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் கூறியதாவது:- லொறியில் மண் ஏற்றிக் கொண்டு வந்த எங்களை நோக்கி ஹெலிக்கொப்டர் சுட்டது, லொறியில் இருந்து இறங்கிய நாம் லொறியின் கீழ் பதுங்கினேம். எம்மைச் சுற்றிச் சுற்றி ஹெலிக்கொப்டர் மீண்டும் சுட்டது.

சூட்டுக்கு தாக்குப்பிடிக்க முடியாத நான் ஏழெட்டு கம்பி வேலிகளையும் பலவேலிகளையும்தாண்டி ஓடினேன்.

எனது காலில் சுள்ளிட்ட உணர்வு மட்டுமே ஏற்பட்டது.

அதனைக் கவனிக்க அவகாசமற்று ஒரு வீட்டுக்குள் நுழைந்தேன்.

காலில் சூடுபட்டு இரத்தம் பீறிட்ட நிலையில் வீட்டுக்காரரை சேலைத் துண்டு தரும்படி கேட்டேன். சேலைத் துண்டு இல்லை எனக் கூறிய அவர் வீட்டை விட்டுப் போகும்படி சொன்னுர்.

வேறுவழியின்றி எனது சாரத்தின் ஒருபகுதியைக் கிழிக்க முயன்றேன் முடியவில்லை. ஊத்தைத் துணி ஒன்று அகப்பட்டது. அதனை எடுத்து காயத்தைக் கட்டிக் கொண்டு ஓடினேன்.

இவ்வாறு சுப்பையா நாகநாதன் கூறினுர்.

### திருவருட் செல்வியாக விளங்கிய

# தெய்வ மகள் காரைக்கால் அம்மையார்

இன்று காரைக்கால் அம்மையாரின் நினைவுதினம். அதையொட்டி இக்கட்டுரை வெளியாகிறது.

**செல்வி பூ. ஜெயமலர்**

காரைக்காலம்மையார் சமயப் பரப்பிலும் இலக்கியப் பரப்பிலும் வைத்தெண்ணப்படும் ஒருவர்.

சமணம், பௌத்தம் ஆகிய புறச்சமயங்கள் தமது முழு வேகத்துடன் வளர்ச்சியடைந்ததான சங்கமருவிய காலத்தின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்.

பல்லவர் காலத்திலே சைவம், வைஷ்ணவம் ஆகிய இரு மதங்களும் கிளர்ந்து வளர்வதற்கு இவரே வித்திட்டவர்.

இதனுல் இலக்கியத்தினது பாடுபொருளும் வேறுபட்டது. சிவனை முழுமுதற் பாடு பொருளாக வைத்துப் பாடியவர் அம்மையாரே.

உலகியல் வாழ்விலே இருந்து அதில் ஏற்பட்ட விரக்தி காரணமாக- உலகை வெறுத்துப் பேய்க் கோலங் கொண்டு இறைவனை அடைந்து; என்றும் இறையடியில் இருந்து திருநடம் காணும் பேறு பெற்றவர் என சேக்கிழார் தனது பெரிய புராணம் வாயிலாகக் கூறுகின்ருர்.

அதோடு இத்தகையர் ஒருவர் வாழ்ந்துள்ளார் என நாம் அறுதியிட்டுக் கூறுதற்கு அம்மையாரது மூன்று பாடற்றெகுதிகளே ஆதாரம்.

காரைக்காலிலே வணிகர் குலத்திலே பிறந்து மிகவும் செல்வச் சிறப்போடு வாழ்ந்த இவர்- இளமையிலேயே மிகுந்த இறை நம்பிக்கை கொண்டு செயற்பட்டார்.

அதனுற்ருன் இவர் என்று இவ்வுலகை வெறுத்து இறைவா என்ருரோ அன்றே ஆண்டவன் அவருக்குக் காட்சி கொடுத்தார்.

அறக்கோட்பாடுகளைக் கூறியபின் அதன் மூலம் இறைநாட்டத்தை ஏற்படுத்தும் நூல்கள் எழுந்த காலப்பிரிவில் தோன்றி பக்தியால் இறைவனை அடையலாம் என்பதனை - கோயிலையும் சூழ்ந்துள்ள இயற்கையையும் சுட்டிக்காட்டி விளக்கி - மக்களைப் பக்தி நெறியிற்றிசை திருப்பினுர்.

இறைவனுக்கு உருவம் கற்பித்து அதில் ஈடுபடுகின்றனர். இவர் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை, அற்புதத்திருவந்தாதி ஆகிய மூன்று பிரபந்தங்களையும் பாடியருளினுர்.

இறைவனைப் பாடுதற்காகவே நாம் பிறந்தோம் என்ற தேவார திருவாசகத்தில் காணப்படும் தொனியை இவரது பாடல்களிலும் காணலாம்.

நம்மடன் பணி செய்திடப்படதே எனினும் அதி பாம்பணி திங்கட்சடை முடிப் பெருமான் சிவனுக்கே என்ற உறுதியான கொள்கை இருந்தது "தாயுமிலி தந்தையிலி தான் தனியன்" என்ற மணிவாசகரது கருத்து இவரது பாடல்களிற் காணப்படுகின்றது. இவர் 'எம்மைப் பேணும் அம்மை காண்'' என்ற சிவனது வாக்குப் பெற்றவர்.

அன்பால் அடையக் கூடிய இறைவனை அழகாகப் பாடும் இவர் சிறந்த நகைச்சுவைப் பாங்கினையும் கையாண்டுள்ளார்.

திருவாலங்காட்டின் இறைவனைக் கண்டு தரிசித்த இவர் கடலையையும் தனது பாடல்களிற் பாடியுள்ளார்.

இத் தன்மைப் பாடல்களை அம்மையார் தோழமைப் பாங்கில் இருந்து பாடியுள்ளார். "காலையிலே செந்தளிர் போன்றிலங்கு மேனி'' என்ற பாடலில் சிவப்பு, கறுப்பு, வெள்ளை ஆகிய மூன்று நிறங்களோடு இறைவனை ஒப்பிட்டுள்ளார்.

இந்நிலை இராட்சச, தாமச, சாத்வீகமாகிய முக்குணங்களுமாக இறைவன் இருக்கின்ருன் என்பதை மக்களுக்குக் காட்டி நிற்கின்றது.

இலக்கியப் பரப்பிலே இவரை நோக்கும் போதும் குறிப்பிடத்தக்களவு முக்கியத்துவம் பெறுகின்ருர். காதலையும் போரையும் பொருவாகப் பாடிய காலம் போய், அறநெறிப் பாடல்கள் மலிந்திருந்த காலத்தில் அம்மையார் புதிய பொருளாகப் பக்தியை இலக்கியத்திற் புகுத்தினுர்.

இது பிற்காலத்தில் தேவார திருவாசக இலக்கியம் தோன்ற வழிகாட்டியது. அதோடு இலக்கியப் பாடல்கள் என்று கூறுமளவிற்கு இயற்கை வர்ணனை நிறைந்துள்ளது. அறக் கருத்துக்

**ஞானக்கதிர்**

களைக் கூறுதற்குப் பயன்படுத்திய வெண்பா யாப்பையே ஆரம்பத்திற் கையாண்ட போதிலும் பின்னர் கட்டளைக் கலித்துறை, விருத்தம் முதலிய பாவினங்களையும் கையாண்டுள்ளார். இது பிற்காலத்தில் விருத்தப்பா சிறப்புற வழிகாட்டியது.

சமண பௌத்த மதங்கள் முற்போக்கான நிலையில் இருந்து சமூகத்தில் அளவுக்கு அதிகமான கட்டுப்பாடுகளையும் பெண்களை இழிவு படுத்தும் செயற்பாடுகளையும் நடத்தி வந்தன.

ஆனுல் அக்காலத்தில் வாழ்ந்த அம்மையாரோ எவ்வித சலனமுமின்றி இறையை நோக்கிச் சென்று பாடல்கள் பாடினர். பெண் உருவமாகவே சென்றிருந்தால் பல இடர்ப்பாடுகளை அடைய நேரிடலாம் என்பதனுலோ பேயுருக் கொண்டு சென்ருர்? என்பதும் சிந்திக்க வேண்டியதாகும். இவர் இவ்வாறு சென்றமை தமிழர் மனதில் பக்தி நிலையை மட்டுமல்லாது ஓர் விடுதலை உணர்வு கொண்ட புத்தெழுச்சியையும் உண்டாக்கியது.

## மினி திரையரங்குகள் சம்பந்தமாக 'ரெலோ' அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 28

தமிழ்ப் பகுதிகளில் உள்ள மினி திரையரங்குகள் சம்பந்தமாக தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கை வருமாறு;

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதை நோக்கமாகக் கொண்டவர்கள் அதனுடன் இணைந்த நிலையில் கலாசாரம் என்ற அம்சத்தையும் கவனத்தில் எடுக்க வேண்டிய கட்டாய நிலையில் உள்ளார்கள்.

எனவேதான் இன்று விடுதலை ஸ்தாபனங்களும் தனிமனிதர்களும் எம்மினக் கலாசாரத்தை செழுமைப்படுத்தும் நோக்குடன் செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாருன அநேக விடுதலை விரும்பிகளின் முயற்சிகளுக்கு மத்தியில் சில குறுகிய நோக்கம் கொண்டோர் தம் சுயலாபத்தின் நிமித்தம் செயற்பட முனைகின்றனர்.

இவ்வாருனவர்களின் ஒருவகை கலாசார [illegible] அளவில் திறக்கப்பட்டுள்ள [illegible] கும்.

அத்துடன் இத்திரையரங்குகளில் வெளிவரும் திரைப்படங்கள் கூடிய வரை எமது கலாசாரத்தை சிதைப்பவையாகவே உள்ளன.

அத்துடன் அவற்றுக்கான விளம்பரங்கள் அப்பட்டமான தனிமனித விகாரங்களைத் தூண்டுபவையாக உள்ளன.

இதன் காரணமாக நாகரிக சமுதாயமே வெட்கித் தலைகுனிய வேண்டியுள்ளது.

எனவே தான் இந்த அறிக்கை மூலம் தமிழீழம் எங்கும் பரந்த அளவில் உள்ள மினி திரையரங்கு உரிமையாளர்களுக்கு சில எச்சரிக்கைகளை விடுக்கின்றேம்.

1. திரையிடப்படும் திரைப்படங்கள் கூடிய வரை ஆபாசமற்றவையாக, எம் கலாசாரத்தை சிதைக்காதவையாக இருத்தல் வேண்டும்

2. திரைப்படங்களுக்கான விளம்பரங்கள் ஆபாசமற்றவையாக இருத்தல் வேண்டும்.

இவற்றைத் திரையரங்கு உரிமையாளர்கள் நடைமுறைப்படுத்தத் தவறின் இவர்கள் மீது [illegible] நடவடிக்கை எடுக்க வேண்டி [illegible] என்பதைக் கூறிக் கொள்கின்றேம்.

### சமய சந்திகளில்

**மணவாளக்கோல விழா**

பருத்தித்துறை, மார்ச் 28

பருத்தித்துறை தும்பளை அருள்மிகு கணக்கிலாவத்தைச் சித்திவிநாயகர் ஆலய மணவாளக் கோலவிழா இன்று வெள்ளிக்கிழமை இரவு 7-00 மணியளவில் நடைபெறும்.

நாளை சனிக்கிழமை பகல் அன்னதானமும் நடைபெறும்.

### அரச லிகிதர் சேவைச் சங்க மாநாடு நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 28

அரசாங்க லிகிதர் சேவைச் சங்க யாழ் கிளையின் வருடாந்த மாநாடு நாளை சனிக்கிழமை காலை 9 30 மணிக்கு இலங்கை ஆசிரியர் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

திரு வி எஸ். கனகரத்தினம் தலைமையில் இம்மாநாடு நடைபெறும்.

## வலி-கிழக்கு அகதிகளைக் கவனிக்க இணைப்பு அதிகாரி

பலாலி, மார்ச் 28

வலி- கிழக்குப்பிரதேச உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியுள்ள அகதிகளின் நலன்களைக்கவனிக்கும் இணைப்பு அதிகாரியாக இருபாலை விசேஷ சேவை அதிகாரி திரு. செல்லத்துரை செல்வச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்

வலி-கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு கே. சபாபதிப்பிள்ளை இந்த நியமனத்தைச் செய்து உள்ளார்,

வன்செயல்கள் காரணமாக திருமலை, வவுனியா ஆகியஇடங்களில்இருந்து இடம் பெயர்ந்து வந்த அகதிகள் பலர் நீர்வேலி. அச்சுவேலி, பத்தமேனி பகுதிகளில் உள்ள முகாம்களில் தங்கியுள்ளனர்.



**பொய்யாமொழி**

குறள்:

செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப்பு உடைத்து.

பொருள்:

நடுவுநிலைமை உடையவனின் செல்வவளம் அழிவில்லாமல் அவனுடைய வழியிலுள்ளார்க்கும் உறுதியான நன்மை தருவதாகும்

## கல்வி ஒருவரை பூரண மனிதன் ஆக்கவேண்டும்

### பரிசளிப்பு விழாவில் விரிவுரையாளர் உரை

வட்டுக்கோட்டை, மார்ச்.28

மாணவர்கள் பாடசாலைகளில் பெறுகின்ற கல்வியானது அவர்களது குடும்பத்தையும் கிராமத்தையும் நாட்டையும் அபிவிருத்திசெய்யப்பயன்பட வேண்டும். பரீட்சையில் சித்தி பெறுவது தான் கல்வியின் குறிக்கோளாக இருக்கக் கூடாது. அது ஒருவரை பூரணமனிதனுக - எதிர்கால நற்பிரஜையாக- ஒழுக்கசீலனுக- கட்டுப்பாடுடையவராக ஆக்கும் பணியைச் செய்யவேண்டும்.

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருமதி ம. திருச்சிற்றம்பலம் மேற்கண்டவாறு கூறினுர்.

வித்தியாலய அதிபர் திரு. கா. சந்திரபாலன் தலைமையில் விழா நடைபெற்றது.

ஷப்ரு எக்ஸ்போட் லிமிட்டெட் நிர்வாக இயக்குநர் திரு. ஈ. சரவணபவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசுபெற்ற மாணவர்களுக்கு 'கணபதிப்பிள்ளை சண்முகம்' ஞாபகார்த்தப் பரிசில்களை வழங்கினுர்.

திருமதி. திருச்சிற்றம்பலம் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:-

இன்று உலகம் போற்றும் மகாத்மா காந்தி, அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்து அதன் உண்மையை உணர்ந்து சத்தியத்தை நிலைநாட்டி உலகில் உயர்ந்தார்.

அவரைப் போன்று மாணவர்கள் தாம் கற்கும் கல்வியின் மூலம் கூறப்படுகின்ற கட்டுப்பாடுகளை கடைப்பிடித்து வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

கல்வியானது மாணவர்களைச் சுயசிந்தனை உள்ளவர்களாக ஆக்கவேண்டும்

சுயசிந்தனையைப் பற்றி உணராத சிலர் தனியார் நிறுவனங்களுக்குச் சென்று தமது சுயமுயற்சியைக் கெடுக்கின்றனர்.

தனியார் நிறுவனக் கல்வியானது மாணவர்களுக்கு அவசியம் தேவை என்று நாம் எச்சந்தர்ப்பத்திலும் சொல்லமுடியாது.

உயர் கல்விக்கு, குறிப்பாக விஞ்ஞானக் கல்விக்கு ஆங்கிலமொழி மிக முக்கியமாக இருப்பதோடு கருத்துப் பரிமாற்றத்திற்கும் அது அவசியம் தேவைப்படுகிறது.

இதே போன்று ஒருவனது புகழுக்கு மொழியும் சமயமும் அவசியமாகும்.

மாணவர்கள் கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை முற்றுகக் கைவிடக் கூடாது.

இவற்றை நுட்பமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

மாணவர்கள் சார்பில் செல்வி சி. சத்தியவாணியும் ஆசிரியர் சார்பில் திருமதி பத்மசுந்தரி சிவகுருநாதனும் நன்றி நவின்றனர்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

### இளையதம்பி வித்தியாலய பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ் வண்ணார்பண்ணை இளையதம்பி தமிழ் வித்தியாலய ஆங்கில தின பரிசளிப்பு விழா மார்ச் 31 (திங்கட்கிழமை)காலை நடைபெறும்.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி தலைமை வகிப்பார்.

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை உபசெயலாளர் திரு. எஸ் பரமநாதன், யாழ் ரெலிகுளோப் அதிபர் திரு. ம. சிவராசா, டாக்டர் செல்வி இ. சபாமா, தொழில் அதிபர் திரு க கனகராஜா ஆகியோர் விஷேட விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

வித்தியாலய அதிபர் திரு கா. கணேசதாஸன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

திருமதி சிவநாயகமூர்த்தி பரிசுகள் வழங்குவார்.

பரிசுக்குரிய புத்தகங்களை திரு. ம. சிவராசா அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார்.

## நாட்டிய கலையை ஜனரஞ்சகப்படுத்திய பெருமை ருக்மினிக்கே

### அஞ்சலிக் கூட்டத்தில் புகழாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

நாட்டியக்கலையை ஜனரஞ்சகப் படுத்திய பெருமை ருக்மினி அம்மையாரைச்சாரும்.

யாழ். பல்கலைக் கழக நுண்கலைத் துறையும், இராமநாதன் கல்லூரி நுண்கலைப் பிரிவும் இணைந்து நடத்திய அன்னை ருக்மினி அருண்டேல் நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் சிறப்புரை ஆற்றிய பேராசிரியர் கா. சிவத்தம்பி இவ்வாறு குறிப்பிட்டார்.

துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமை வகித்தார்.

அவர் தனது தலைமையுரையில் பின்வருமாறு கூறினுர்:—

ருக்மினி அம்மை என்றதும் எமக்கு நினைவுக்கு வருவது கலாஷேத்திரம். கலை பயிலும் இடத்தைப் புண்ணிய திருத்தலம் என்று கருதினுர். கலைகளைத் தெய்வ வழிபாட்டுக்கு ஊடகமாகக் கருதினுர். மரபு ரீதியான கிராமச் சூழலை அமைத்து எல்லாச் சமயத்தவர்களும் கலைகளைப் பயிலும் வாய்ப்பை ஏற்படுத்தியவர்.

ரஷ்ய அறிஞர் பட்லோவின் செல்வாக்குக்காரணமாக இவரது நாட்டிய நாடகங்களில் டலேயின் சாயலைக் காண்கிறேம்

பேராசிரியர் கா சிவத்தம்பி தனது சிறப்புரையில் பின்வருமாறு கூறினுர் -

இந்திய கலைப் பாரம்பரியத்தில் தென்னிலங்கையின் சிறந்த நாட்டிய வடிவத்தை மெருகூட்டி அரை நூற்றுண்டு காலம் பணியாற்றிக் கலைவிழிப்பின் சின்னமாகத் திகழ்ந்தவர் அம்மை ருக்மினி.

நாட்டியம் என்றுல் சதிர்ஆட்டம் என்ற நிலை இருந்ததைக் கண்டு மனம் வருந்தியவர். ஆனந்த குமாரசாமி, கிருஷ்ண ஐயர் போன்றோரின் வழி நின்று சிருங்கார ரச அடிப்படையை மாற்றி ஆன்ம நேயமாக மலரப் பணி செய்தார்.

அடுத்துப் பேசிய கலாநிதி எஸ். மௌனகுரு பின்வருமாறு கூறினுர்.-

ஏறத்தாழ முப்பத்தொரு ஆண்டுகள் தொடர்ச்சியாக சுமார் இருபத்தைந்து நாட்டிய நாடகங்களை நமக்குஅளித்தவர். தமது நாட்டிய நாடகங்களைப் படமாக்கக் கூடாது என்று கண்டிப்பாக இருந்தார். இதனுல் இவரது நாட்டிய நாடக மரபுகளை மக்கள் அவரது சீடர்கள் மூலமே அடுத்த பரம்பரை ரசிக்க முடியும்.

விரிவுரையாளர்செல்வி சாந்தாபொன்னுத்துரை தயாரித்த "கிருஷ்ணசப்தம்'' என்ற நாட்டிய நாடக நிகழ்ச்சியும் இடம் பெற்றது இராமநாதன் கல்லூரிமாணவிகள்இந்த நிகழ்ச்சியில் பங்கு ஏற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பான சூழலில்
ரெலிபோன் பேச
ரெலிகுளோப்
இரவு பகல் 24 மணி நேர சேவை
எல்லா நாட்களிலும்
ரெலி: 25088 (ஆறு தொடர்புகள்)

உதயன்

28 03 1986 வெள்ளிக்கிழமை

இன்றைய
கெடுபிடிகளின் அச்சமின்றி
ரெலிபோன் பேச
ரெலிகுளோப்
இரவு பகல் 24 மணி நேர சேவை
எல்லா நாட்களிலும்
ரெலி: 25088 (ஆறு தொடர்புகள்)

# தீவுப்பகுதிக்கு உணவு விநியோகம் ஒப்பந்த அடிப்படையில்

நல்லூர், மார்ச் 28
அனலைதீவு, நயினாதீவு, எழுவைதீவுப் பகுதிகளுக்கான உணவுப் பொருள் விநியோகங்கள் இனிமேல் ஒப்பந்த அடிப்படையில் நடைபெறவுள்ளது.

தீவுப்பகுதி உணவு விநியோகம் சம்பந்தமான கூட்டம் ஒன்று நேற்று யாழ் செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கூட்டுறவு ஆணையாளர் மற்றும் ஊர்காவற்றுறை, புங்குடுதீவு ப.நோ.கூ. சங்க முகாமையாளர்களும் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் இப்பகுதி மக்களுக்கான உணவு விநியோகம் சீராக வந்தமையினாலேயே இப்புதிய திட்டம் அமுல் படுத்தப்படவுள்ளது.

அத்தோடு இப்பகுதிகளுக்குத் தேவையான எரிபொருளில் 70 சதவிதத்தை சேமித்து வைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

வடபகுதிப் பொதுப் பரீட்சை

## கணித பாடம்: வினாத்தாள் முன்னரே வெளியாகியதாகப் புகார்

யாழ்ப்பாணம், மார்ச் 28
நேற்று வடபகுதிப் பாடசாலைகளில் நடைபெற்ற க.பொ.த. (சாதாரண) தரத்திற்குரிய (11ஆம் வருடத்திற்குரிய) கணிதபாட பொதுப்பரீட்சை வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னரே வெளியாகியதாகவும் —

அத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தமிழீழ மாணவர் பேரவை (ரெசோ) அறிவித்திருக்கிறது.

இது தொடர்பாக ரெசோ அமைப்பு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கல்வியை வியாபாரமாக்கும் செயல் எம்மவர்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது. இது எமது சமுதாயத்தைப் பின்தள்ளச் செய்யவே வழிவகுக்கும்.

இன்று 27-3-86 நடைபெற்ற கணிதபாடப் பரீட்சை வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னரே வெளியானதாக தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்படும் சிலரின் பெயர்களும், தனியார் கல்வி நிறுவனங்களின் பெயர்களும் எமக்குக் கிடைத்திருக்கின்றன.

அவர்கள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்று ஊர்ஜிதப்படுத்தப்பட்டால் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதுசம்பந்தமான விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு நல்கும்படி தகவல் தெரிந்த மாணவர்களைக் கேட்டுக்கொள்கிறோம். எம்முடன் தொடர்புகொள்ளும்படியும் அவர்களை வேண்டுகிறோம்.

தனியார் கல்வி நிறுவனங்களைச் சாராமல் சொந்தக் காலில் நிற்கும் மாணவர்களுக்கு வினாத்தாள்கள் வெளியாகும் இத்தகைய சம்பவங்கள் விரக்தியையும் கவலையையும் ஏற்படுத்தியிருக்கின்றன.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்
திருமதி இராசமணி இராஜலிங்கம்
(குட்டிமணி)
உரிமையாளர்: குமரன் அரிசி ஆலை, பண்குளம்.

தோற்றம்: 30-06-1945
மறைவு: 27-02-1986
திதி: 29-03-1986



அன்பின் உறைவிடமாய், எம்மையெல்லாம் வழிநடத்தும் தெய்வமாக இருந்தாயே! மின்னுமல் முழங்காமல், எங்கு சென்றாய்! கலங்குகிறோம் பரிதவிக்கின்றோம். மீளாத்துயிலிலும் உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது சபிண்டீகரண கிரியைகள் 29-03-86 சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

27-02-86 இல் மரணச் செய்தி கேட்டுப் பலவகையில் உதவியவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது நன்றிகள்.

கணவர், மக்கள்

'இராச வாசா'
வல்வெட்டித்துறை

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தமிழ்ப்ருடமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 28-03-1986
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number QJ60 N 86

# முதலில் தேர்தல் நடக்க வேண்டும்

## சிறிமா மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 28
நாட்டுக்கு என்ன நடக்கும் என்று சிங்கள மக்கள் என்னைக் கேட்கின்றார்கள். முதலில் தேர்தல் நடக்கட்டும். என்ன நடக்கும் என்பதை அப்போது நான்சொல்வேன்

சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கேகாலையில் கூட்டம் ஒன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

திருமதி பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது:

தமிழருக்கு உரிமைகள் தருவதாக பதவிக்கு வரும்போது இன்றைய அரசாங்கத்தை நடத்துபவர்கள் உறுதியளித்தனர்.

உறுதியளித்தபடி நடக்கத் தவறிவிட்டனர் இன்றைய ஆட்சியாளர்.

அதன் பயனாகத்தான் பயங்கரவாதம் ஆரம்பமானது. சொன்னபடி நடந்து இருந்தால் பயங்கரவாதமே வந்து இருக்காது.

வடக்கு இராணுவ முகாம்களில் இருந்து சிப்பாய்கள் வெளியே போவது இல்லை. போராளிகள்தான் வடக்கில் சுதந்திரமாக நடமாடுகின்றார்கள். அரசுக்குவர வேண்டிய வரிப் பணத்தையும் போராளிகள்தான் வசூலிக்கின்றார்கள்.

சுதந்திரக்கட்சி ஆட்சியில் யாழ்மக்கள் விவசாயத்துறையில் ஈடுபட்டு நல்ல பயன் அடைந்தனர். ஆனால் இன்று அவர்கள் கஷ்டப்படுகின்றனர். காரையர்களினால்தான் ஐ.தே.க. 1977இல் பதவிக்கு வந்தது.

இப்படி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சொன்னார்.



யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி உயர் வகுப்பு மாணவிகளின் வருடாந்த மதியபோசன வைபவம் அண்மையில் நடைபெற்றது. வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு அன்ரன் அல்பிரட் உரை நிகழ்த்துவதை படத்தில் காணலாம்.

யாழ் மத்திய கல்லூரி அதிபர் திரு. வி. பாலசுந்தரம், வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி அரியமலர் இராஜரத்தினம், உயர் வகுப்பு மகளிர் சங்கத் தலைவி செல்வி சுமித்திரா, வேம்படி மகளிர் கல்லூரி உப அதிபர் திருமதி றஞ்சி தம்பிராசா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

(படம்: என். சற்குணலிங்கன்)

# வயல் வெளிகளில் சீருடையினர் நடமாட்டம்

## பயிர்கள் நாசம் என முறையீடு

நல்லூர், மார்ச் 28
வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு பகுதிகளில் உள்ள வயல் வெளிகள் ஊடாக சீருடையினர் அடிக்கடி நடமாடித் திரிவதால் அப்பகுதிகளில் செய்கை பண்ணப்பட்டுள்ள பயிர்களுக்கு பெரும் நாசம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக இப்பகுதி மக்கள் யாழ் அரசாங்க அதிபரிடம் முறையிட்டுள்ளனர்.

அத்தோடு வடபகுதி இணைப்பதிகாரியையும் சந்தித்து இது சம்பந்தமாக முறையிடவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

வடபகுதி இணைப்பதிகாரி அவசர அழைப்பின் காரணமாக கொழும்பு சென்றுவிட்டதால் இவர்களது சந்திப்பு பின்போடப்பட்டுள்ளது.

### காரைநகரில் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வந்த மேற்படி கோஷ்டியில் இருபதுக்கு மேற்பட்டவர்கள் இருந்தார்கள் என்றும் அவர்கள் ஆயுதபாணிகளாக வந்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

நகைகள், பணம் ஆகியவற்றை அபகரித்துக் கொண்ட கொள்ளையர்கள் இதர வீட்டுப்பாவனைப் பொருள்களான ரீ.வி., மின்விசிறி, குளிர்சாதனப் பெட்டி ஆகியவற்றையும் அபகரித்துச் சென்றதாகச் சொல்லப்படுகிறது.

### தீப்பந்தம் ஏந்தி .

(1ம் பக்கத் தொடர்ச்சி)
நடைந்தது.

இரவு 9.00 மணியளவில் பேரணி நல்லூரை அடைந்ததை அடுத்து, அங்கு பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 15 கூட்டமைப்புக்களுடன் இணைந்து இப்பேரணியை நடத்தியது.

பேரணி சென்ற வீதிகளில் மக்கள் தேங்காய் எண்ணெய்க் கிண்ணங்களை வைத்திருந்து தீவட்டிகளுக்கு எண்ணெய் வார்த்தனர்.

### முறையாக ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வது:-

இனப்பிரச்சினையினால் நாட்டின் அபிவிருத்தி தடைப்படுகிறது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண சகலரும் ஒத்துழைக்க வேண்டும். சுதந்திரக் கட்சியும் பூரண ஆதரவு வழங்க வேண்டும். இப்படி திரு. ஹாருளே சொன்னார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா பேசுகையில் சொன்னதாவது:-

தீர்வுகாண சுதந்திரக் கட்சி ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளது.

ஆனால் எங்களை மதித்து நடக்க வேண்டியது அரசின் கடமை. முறையான அழைப்பு வந்தால் ஒத்துழைப்புத் தருவது பற்றி யோசிக்கப்படும்.

ஒன்று மட்டும் பகிரங்க ரகசியம். நாட்டின் மூன்றில் ஒரு பங்கு இன்று போராளிகளின் கைகளில் உள்ளது.

இப்படி திரு. அனுரா பண்டாரநாயக்கா சொன்னார்.

## திருப்பலிப் பூசைக்கு . , .

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)
திக்கம் சென்று கடற்கரையோரமாக தனது மோட்டார் சைக்கிளில் விரைந்து சென்றார். அவர் விரைவாக கடற்கரையோரமாக இராணுவ முகாமுக்கு சுமார் 200 யார் தொலைவில் சென்றார். அச்சமயம் இராணுவ முகாமிலிருந்து வந்த துப்பாக்கி வேட்டுக்களும், 'ஷெல்' குண்டுகளும் இவரது முழங்காலிலும் கையிலும் பலத்த காயங்களை ஏற்படுத்தினவாம்.

இவர் தமது சீருடையுடன் கைகளை உயர்த்திய வண்ணம் இருந்தபோதும் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்களும் 'ஷெல்' தாக்குதல்களும் நடந்தன.

இரத்தம் தோய்ந்த சீருடையுடன் வண. பிதா சகாயதாசன் தமது மோட்டார் சைக்கிளைப் போட்டுவிட்டு வந்த வழியே திரும்பிப் போனார்.

அப்பகுதியால் சென்ற பொதுமக்கள் சீருடை இரத்தத்தில் நனைந்த நிலையிலிருந்த இவரைத் தூக்கிச் சென்று காப்பாற்றினார்கள். பின்பு பருத்தித்துறையிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சைகள் வழங்கப்பட்டன.

இவர் பின்பு வான் ஒன்றின் மூலம் பருத்தித்துறை கடற்கரை வீதி சென் தோமஸ் தேவாலயத்துக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

# விளையாட்டரங்கு

## ஜொலி ஸ்ரார்ஸ் அணி வெற்றி!

### 'ஓல்ட் கோல்ட்ஸ்' அணியை தோற்கடித்தது

யாழ்ப்பாணம், மார்ச் 28
யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக கிரிக்கெட் அணிக்கு மீண்டும் வெற்றி கிடைத்திருக்கிறது.

இம்முறை மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஆட்டத்தில் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் அணியை 4 விக்கெட்டுக்களினால் தோற்கடித்தது ஜொலி ஸ்ரார்ஸ் அணி.

ஜொலி ஸ்ரார்ஸ் வீரர் பி. பிரபானந்தன் சிறப்பாக துடுப்பெடுத்தாடி தனது அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டை 'பிக்நெல்' மைதானத்தில் மட்டுப்படுத்தப்பட்ட 40 ஓவர்கள் அடிப்படையில் இந்த ஆட்டம் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்ட் கோல்ட்ஸ் அணி வழங்கப்பட்ட 40 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றது.

டி. குலநாதன் 41 ஓட்டங்களைப் பெற்றார். சண்முகரட்ணம், பாலசுப்பிரமணியம் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 32, 10 ஓட்டங்களைப்பெற்றனர்.

எட்டு ஓவர்களில் அபாரமாக பந்து வீசிய ஜொலி ஸ்ரார்ஸ் வீரர் எஸ். பி. எஸ். இளங்கோ 6 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலி ஸ்ரார்ஸ் அணி 29 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 137 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

பி. பிரபானந்தன் சிறப்பாக துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 74 ஓட்டங்களைப் பெற்றார். தமது அணித்தலைவருடன் இணைந்து ஆறுவது விக்கெட் ஸ்தானத்திற்கு அவர் சேர்த்த 68 ஓட்டங்கள் ஜொலி ஸ்ரார்ஸ் அணியின் வெற்றியை உறுதி செய்தது.

ஜொலி ஸ்ரார்ஸ் வீரர் பத்மபிரகாஷ் 17 ஓட்டங்களை தமது அணிக்குப் பெற்றுக் கொடுத்தார்.

திரு எஸ் செல்வரட்ணம், திரு. கே. நந்தகுமார் ஆகியோர் இந்த ஆட்டத்திற்கு மத்தியஸ்தம் வகித்தனர்.

# வீடுகள், கடைகள் படையினர் பாவனைக்கு

கிளிநொச்சி, மார்ச் 28
கிளிநொச்சி இராணுவ—பொலீஸ் கூட்டு முகாமுக்குச் சமீபமாக உள்ள கடைகள், வீடுகள் யாவும் வெறிச்சோடிக் கிடக்கின்றன

கிளிநொச்சி இராணுவ பொலீஸ் கூட்டுமுகாம் விஸ்தரிப்பினைத் தொடர்ந்து தமது வீடுகளையும் கடைகளையும் பூட்டிவிட்டு வேறு இடங்களுக்குச் சென்ற சிலர் கடந்த செவ்வாய்க்கிழமை இராணுவ முகாமிற்கு அழைக்கப்பட்டனர்.

ஆயுதப் படையினரின் பாவனைக்குத் தேவை என்று கூறி, அக்கட்டடங்களிலிருந்து பொருள்களை வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த உத்தரவினைத் தொடர்ந்து கூட்டு முகாமிற்கு அருகில் உள்ள சுமார் பத்துக்கு மேற்பட்ட கடை உரிமையாளர்களும் இரண்டு தனியார் வீட்டு உரிமையாளர்களும் தங்கள் உடைமைகளை ஏற்றிவிட்டு கட்டடக் கதவுகளைத் திறந்துவிட்டுச் சென்றுள்ளனர். அவை இப்போது வெறிச்சோடிக் கிடக்கின்றன

## ஜோன்ராஜன் தடுத்து வைப்பு

மட்டக்களப்பு, மார்ச் 28
பிரபல எழுத்தாளரும் சோதிடருமான ஜோன் ராஜன் நேற்று மட்டக்களப்பில் ஆயுதப்படையினரால் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டார்.

நேற்று நண்பகல் ஜோன்ராஜன் உட்பட சுமார் 50 பேரை ஆயுதப் படையினர், கல்லடித் தெருப் பகுதியில் நடத்தப்பட்ட தேடுதலின் போது விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

முகமூடிநபர் தலையாட்ட மறுத்ததைத் தொடர்ந்து ஜோன் ராஜனைத் தவிர ஏனையோர் விடுவிக்கப்பட்டனர்.

ஜோன்ராஜனின் வீட்டில் லெனின் பற்றிய நூல்களும் ஆயுதப்படையினரால் கைப்பற்றப்பட்டன.

## வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

நல்லூர், மார்ச் 28
யாழ்ப்பாணம் பஸ் டிப்போ ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டது. வேலைநிறுத்தமும் கைவிடப்பட்டு பஸ் சேவைகள் வழமைபோல் நேற்று நடைபெற்றன

யாழ்ப்பாண பஸ் டிப்போ ஊழியர்களுக்கு மாசி மாதச் சம்பளம் வழங்கப்படாததனால் நேற்று முன்தினம் அவர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்தது தெரிந்ததே

# வலி வடக்கில் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)
சிப்பாய்கள் படுகாயம் அடைந்திருக்கலாம் அல்லது இறந்திருக்கலாமென்று கூறப்படுகின்றது.

தாக்குதலைத் தொடர்ந்து திரும்பி விமான நிலயத்தை நோக்கிச் சிப்பாய்கள் சென்றனர்.

கவசவாகனங்களாலும், துப்பாக்கிகளாலும் நிலத்தில் இருந்து சுமார் அரை மணி நேரம் தொடர்ச்சியாகச் சுட்ட பின்பு முகாமுக்குத் திரும்பினர்.

இதன் தொடர்ச்சியாகக் கறுப்பு நிற ஹெலிக்கொப்டர் ஒன்று கட்டுவனில் இருந்து குரும்பசிட்டி ஊடாக, வயாவிளான்வரைபறந்துசுட்டது

பத்து மணிக்கு

பின்பு சுமார் 10 மணி அளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று மீண்டும் சரமாரியாகச் சுட்டவாறு அயல் கிராமங்களைத் தாக்கியது.

ஒரு மணி நேரமாக வானத்தில் ஹெலிக்கொப்டர் தாக்குதல் இடம் பெற்றது. நிலத்தில் இருந்தும் தாக்குதல் நடத்தப்பட்டது.

குரும்பசிட்டி, வறுத்தலைவிளான், மயிலிட்டி தெற்குப் பகுதிகளை நோக்கி ஷெல்கள் ஏவப்பட்டன.

இதனால் குரும்பசிட்டியில் தோட்டங்களில் பெரிய இடங்குகள் காணப்படுகின்றன. வறுத்தலைவிளானில் பாஸ்கரலிங்கம் என்பவரது வீடு பலத்த சேதம் அடைந்தது. இன்னும் பல வீடுகள் சேதமுற்றன.

இவ்விடங்களில் நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவங்களால் பலர் இடம்பெயர்ந்துள்ளதால் உயிர் உடற் சேதங்கள் ஏற்படவில்லை.

பன்னிரண்டு மணிக்கு

நண்பகல் 12 மணியளவில் அச்சுவேலி வீதிவழியாக வந்த சிவப்பு நிற 'டெலிக்கா' இன வான் ஒன்று வயாவிளானை நோக்கி வந்தது. தொண்டைமானாறு முகாம் பக்கம் இருந்து வந்த கறுப்பு நிற ஹெலிக்கொப்டர் ஒன்று இவ்வானைத் துரத்திச் சுட்டது.

வானில் இருந்த ஒருவர் நெஞ்சில் குண்டுபட்டு படுகாயமடைந்தார். வானில் வந்த ஏனைய நால்வரும் காயமடைந்தனர்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து வயாவிளான் சந்திக்கு சமீபமாக உள்ள பகுதிகளை நோக்கியும் சுடப்பட்டது. இரண்டு மணி நேரமாக இத்தாக்குதல் தொடர்ந்தது.

2-30 மணிக்கு

பிற்பகல் 2-30 மணி அளவில் சிவப்பு நிற ஹெலிக்கொப்டர் ஒன்று வயாவிளான் சந்தியடியிலும், பக்கங்களிலும் சுட்டும், ஷெல் அடித்தும் கொண்டிருந்தது.

இதனால் பலர் பாதிக்கப்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகின்றது.

அப்போது நிலப்பகுதியில் இருந்தும் குட்டுச் சத்தங்கள் முன்னேறி வந்துகொண்டிருந்தன அவர்களுக்குப் பாதுகாப்பளிப்பது போன்று கறுப்புநிற ஹெலிக்கொப்டரும் தொடர்ந்து பறந்து கொண்டு சுட்டுக் கொண்டிருந்தது

போராளிகள் எதிர்த் தாக்குதலுக்குத் தயாரான நிலையில் ஆயுதங்கள் சகிதம் நிற்கக் காணப்பட்டனர்.

பிந்திக் கிடைத்த செய்திகளின்படி ஹெலிக்கொப்டர் தாக்குதல், ஷெல் தாக்குதல் ஆகியன பி.ப. 6 மணிவரை நடந்ததாகத் தெரியவந்தது.

## வல்வையில்

வல்வெட்டித்துறை இராணுவ முகாமுக்கு எதிராக அமைந்துள்ள மூன்று வீடுகளை இராணுவத்தினர் நேற்றுக் குண்டு வைத்துத் தகர்த்தனர்

## வங்கிக்கு பாதிப்பில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 28
கொழும்பு மாடிக்கட்டடம் ஒன்றில் தீப்பிடித்ததில் தனியார் நிறுவனம் ஒன்றுதான் பாதிக்கப்பட்டது.

இந்த நிறுவனம் மூன்றாம் மாடியில் அமைந்திருந்தது.

கீழ் மாடியில் உள்ள வர்த்தக வங்கிக் கிளை இச்சம்பவத்தினால் பாதிக்கப்படவில்லை.

இந்தக் கட்டடம் வர்த்தக வங்கிக்குச் சொந்தமானதும் அல்ல. வங்கியின் தலைமைக் காரியாலயம் அக் கட்டடத்தில் அமையவில்லை

இப்படி யாழ் வர்த்தக வங்கி முகாமையாளர் அறிவித்தார்.

### இங்கெல் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)
நேரகாலத்துடன் வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

நண்பகல் சுமார் 11.30 மணியளவில் வட்டமிட்டுப் பறந்த ஹெலிக்கொப்டர் ஒன்று கடலில் வந்து கொண்டிருந்த ட்ரோலர் ஒன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. ட்ரோலர் சிறிது சேதமடைந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org